**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 06ம் நாள்
**இ.ம.எண். 2/2024**
**இல்**
**அசல் வழக்கு எண். 7/2020**

ராஜேந்திரன் .. வாதி

//எதிர்//

1. தமிழக அரசு சார்பாக அதன் மாவட்ட ஆட்சியர்,
நாகப்பட்டினம் (தற்போது மயிலாடுதுறை).
2. தாசில்தார், தரங்கம்பாடி.
3. கலியபெருமாள் (இறந்தார்) ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. அசோக் @ சம்பத்குமார்
5. ரமேஷ்
6. செங்குட்டுவன் ..எதிர்மனுதாரர்கள்/4–6 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 06.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. வேணுகோபால், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களுக்கு போதுமான வாய்ப்புகள் வழங்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாததால் கடந்த 31.07.2025 அன்று தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 23.10.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது குறிப்பிட்ட காலகெடுவிற்குள் இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்காததால் பிறப்பிக்கப்பட்ட Abatment உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் வாதி ஆவார். தாவா சொத்தைப்பொறுத்து விளம்பல் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், இந்நிலையில் 3ம் பிரதிவாதி கடந்த 29.07.2020 ஆம்

ஆண்டு இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசுதாரர்களை வழக்கில் சேர்க்கவேண்டும் என்று தெரியாததால் 3ம் பிரதிவாதி இறந்த விபரத்தினை தனது வழக்கறிஞரிடம் தெரிவிக்காமல் விட்டுவிட்டதாகவும், வழக்கு 23.09.2024 அன்று வழக்கு விசாரணைக்காக கெடு போடப்பட்டுள்ளதாகவும், விசாரணையை தொடங்கவேண்டும் என்று வழக்கறிஞர் தெரிவித்ததன் பேரில் வழக்கறிஞரை நேரில் சென்று பார்த்தபோது தான் 3ம் பிரதிவாதி இறந்த விபரத்தினை தெரிவித்ததாகவும், பின்னர் தனது வழக்கறிஞரின் சட்ட ஆலோசனை கிடைக்கப்பெற்று இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை இவ்வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமும் நியாயமாகவும் உள்ளதாகவும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே, மேற்படி வழக்கில் காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யாமல் அபேட்மெண்ட் ஆகிவிட்டதாகவும், மேற்படி வழக்கில் காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யாமல் 1500 நாட்கள் அபெட்மெண்ட் ஆகியிருப்பதை ரத்து செய்ய அனுமதி வழங்கக்கோரி தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரர்களுக்கு போதுமான வாய்ப்புகள் வழங்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாததால் கடந்த 31.07.2025 அன்று தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

4. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை இந்த மனுவை அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>**தீர்வு:**</u>

5. மனுதாரர் தரப்பில், 3ம் பிரதிவாதி கடந்த 2020ம் ஆண்டு இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசுதாரர்களை வழக்கில் சேர்க்கவேண்டும் என்று தெரியாததால் வழக்கறிஞரிடம் தெரிவிக்காமல் விட்டுவிட்டதாகவும், பின்னர் மனுதாரரது வழக்கறிஞரின் சட்ட ஆலோசனை கிடைத்துள்ளது என்றும், 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை இவ்வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமும் நியாயமாகவும் உள்ளதாகவும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்படும் என கூறப்பட்டுள்ளது.

6. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. 3ம் பிரதிவாதி கலியபெருமாள் கடந்த 29.07.2020 அன்று இறந்துவிட்டார். அவரது வாரிசுகளை உரிய நேரத்தில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்பதால் இந்த வழக்கு அற்றுபோய்விட்டது. பிரதிவாதியின் வாரிசுகளான எதிர்மனுதாரர்களை பிரதிவாதி இறந்தபிறகு வழக்கில் வாரிசாக சேர்த்து வழக்கை நடத்த வேண்டும் என்ற விபரம் தனக்கு தெரியாது என்று கூறப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கூறிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது . மேலும், 3ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கில் அவசிய தரப்பினர் ஆவார்கள். எனவே, அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து வழக்கு நடத்துவதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும் நஷ்டமும் ஏற்படாது. மாறாக அசல் வழக்கில் முழுமையாக தீர்வு ஏற்படும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**8. முடிவாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 23.10.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.10.23 16:22:03 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.**

**<u>இணைப்பு:</u>**

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.10.23 16:22:07 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.**